DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.39/2025

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ரவீந்திரன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)
10.03.2026 at 12.30 P.M.

முதல் விசாரணை:–

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 24.11.2024 ந் தேதி கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது எனக்கு கிடைத்த தகவலின் பேரில் முதல் நிலைக்காவலர் – 2402 – திரு.கருப்பையா மற்றும் நிலைய தலைமைக் நிலைக்காவலர் – 1881 திரு.சேதுபாஸ்கர் ஆகியோருடன் மேலக்கிடாரம் ஊரில் உள்ள டாஸ்மாக் எதிரே உள்ள பெட்டிக்கடையில் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்து ரோந்து சென்ற போது போலீசாராகிய எங்களை கண்டதும் ஓடி எத்தனித்த நபரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது அந்த நபர் மேலக்கிடாரத்தை சேர்ந்த மூக்காண்டி என்றும் தெரியவந்தது.

2. அந்த இடத்தை சோதனை செய்த போது அவர் அரசு அனுமதியின்றி 180 M.L அளவுள்ள Golden Choice என்ற லேபிள் ஒட்டப்பட்ட அரசு மதுபானங்கள் 7 பிராந்தி பாட்டில்கள் விற்பனைக்காக கடையில் வைத்திருந்தார். அதனடிப்படையில் எதிரியை நான் காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த பிராந்தி பாட்டில்களை அந்த இடத்தில் தனி நபர்கள் யாரும் இல்லாததால் உடன் வந்த போலீசாராகிய முதல் நிலைக்காவலர் – 2402 – திரு.கருப்பையா மற்றும் நிலைய தலைமைக் நிலைக்காவலர் – 1881 திரு.சேதுபாஸ்கர் ஆகியோர் முன்னிலையிலும் நான் வழக்கு சொத்தை 10.45

மணிக்கு கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தேன். அந்த அத்தாட்சியில் போலீசார் இருவரிடமும் சாட்சியாக கையொப்பம் பெற்றேன்.

3. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் 11. 45 மணிக்கு நிலையம் வந்து நிலையக்குற்ற எண் 54/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் சாட்சிகள் முதல் நிலைக்காவலர் – 2402 – திரு.கருப்பையா மற்றும் நிலைய தலைமைக் நிலைக்காவலர் – 1881 திரு.சேதுபாஸ்கர் ஆகிய இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான Golden Choice என்று லேபிள் ஒட்டப்பட்ட அரசு மதுபானம் 7 பிராந்தி பாட்டில்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.3 ஆகும். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து அன்றே எதிரி மூக்காண்டி மீது 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட அ.,சா.1 மற்றும் 2 எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இந்த சம்பவ இடமானது ஆட்களை நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை நான் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்ற விவரம் காவல் துறையில் உள்ள பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றியதாக சொல்லப்படும் அன்றைய தேதியிலேயே வழக்கு விசாரணை முழுவதையும் முடித்து விட்டேன் என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக கூறப்படும் மதுபாட்டில்களை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில், நேரத்தில் சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

SADHU SIVA
SUBRAMANIAN

Digitally signed
by SADHU SIVA
SUBRAMANIAN
Date: 2026.03.04
16:52:00 +0530